1975 மார்ச் 7]

Distribution of soaps through Civil Supplies Corporation

* 225 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to distribute groundnut oil, soaps, etc., to card holders through the stores opened by Civil Supplies Corporation ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கடலை எண்ணெய், தூய்மைப்படுத்தப்பட்ட கடலை எண்ணெய், குளியல் சோப்புகள், சலவைச் சோப்புகள் ஆகியவை வாணிக அடிப்படையிலும், அவை கிடைப்பதைப்பொறுத்தும், உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

சிறுதொழில் வளர்ச்சிக்குக் கடன்கள்

* 226 **வினா—திரு. கே. ரங்கனதன்:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் வளர்ச்சிக்காக 1972-73-ம் ஆண்டில் அரசினால் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) கோவை மாவட்டத்திற்கு மட்டும் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1972-73 ஆம் ஆண்டில் தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும் தமிழ் நாடு தொழில் முதலீட்டு கழகமும் சிறுதொழில் களுக்கு வழங்கிய கடன்களின் விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ரங்கனதன்: தலைவரவர்களே, தற்சமயம் தொழில் வளர்ச்சிக்குக் கொடுக்கின்ற கடன்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக் கின்றன என்று சொல்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

@ 258–263ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 7

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது சரியான விவரமல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இங்கே கொடுத்திருக்கின்ற விவர அறிக்கையில் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் 1972-73-ம் ஆண்டு கடனுதவி கோரி, கன்னியாகுமரியிலிருந்து எந்த விண்ணப்பமும் வரவில்லை, எந்த உதவித்தொகையும், கடனும் வழங்கப்படவில்லையென்றிருக்கிறது. அங்கிருந்து விண்ணப்பங்கள் வரவில்லையா? விண்ணப்பங்கள் வராமலிருப்பதற்கு என்ன காரணம்? அந்த இலாகாவை நிர்வகிக்கின்ற அதிகாரிகள் ஒழுங்காக விளம்பரம் செய்யவில்லையென்பதுதான் இதற்குக் காரணமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விண்ணப்பம் வரவில்லை என்ற குறிப்புதானிருக்கிறது. சிறு தொழில் அதிபர்கள் முன்வந்து கடன் கேட்கிறார்கள், வியாபாரிகள் முன்வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில், அதிகாரிகளைப் பொறுத்தவரை முயற்சி எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து, விண்ணப்பம் வந்தால், அதற்கும் நடவடிக்கை எடுக்கலாம்

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் கொடுத்துள்ள இந்தக் கடன் சம்பந்தப்பட்ட விவர அறிக்கையிலே ரொம்பப் பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் ஒரே ஒரு ஆளுக்கு, ரூ. 25,000 கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே உள்ளவர்கள் வேறு யாரும் மனுச் செய்யவில்லையா? அது தொழில் வளர்ச்சியிலே பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், அங்கு தொழில்களை வளர்க்க வேண்டுமென்ற அந்த நோக்குடன் அரசு வேறு முயற்சி எடுக்கவில்லையா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சிறு தொழில் நடத்துபவர்கள், அரசாங்கத்திற்கு அவர்களாக முன்வந்து, மனு செய்து கடன் பெறுகிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே தொழில் வளம் பெருகவேண்டுமென்று, ஹோசூர் பகுதியிலே தொழில் துறை வளர்ச்சிக்குத் தனியாக முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கடன்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அவ்வளவுபேரும் சிறுதொழில்களை ஆரம்பித்து, உற்பத்தியைத் தொடங்கிவிட்டார்களா? அல்லது உற்

1975 மார்ச் 7]

பத்தி தொடங்கிய தொழில்கள் எவ்வளவு? உற்பத்தி தொடங்காத தொழில்கள் எவ்வளவு? கடன் வாங்கி, உற்பத்தியைத் தொடங்காமலிருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த விவரங்கள் இதிலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தச் சிறு தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியைப் பெறுகின்றபொழுது, சில கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகளைத் தளர்த்தினால் ஏராளமான பேர் சிறுதொழில்களிலே அனுகூலம் பெறுவார்கள், ஆதாயம் பெறுவார்கள். ஆகவே, நிபந்தனைகளைத் தளர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவையான, அவசியமான நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் பணம் கொடுக்கப்படுகிறது. இப்பொழுதிருக்கிற பிரச்னை பணம் போதவில்லை யென்றுதான் வந்திருக்கிறதே தவிர, பணம் கிடைப்பதிலே கஷ்டம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சிறுதொழில்களுக்கு வாங்கிய கடனைக் கொண்டு உற்பத்தி செய்வதற்குள்ளாக பல இடைஞ்சல்கள் வந்துவிடுகின்றன. மின்சார வெட்டு வருகிறது, அதனாலே கொஞ்ச நாள் அந்தத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. ரா மெட்டீரியல்ஸ் இல்லாத காரணத்தாலே கொஞ்ச நாள் பாதிக்கப்படுகின்றன. அதனால், சிறுதொழில்களை கடனில் ஆரம்பித்து தொழில் நடத்தும்போது அந்தத் தொழிலில் கிடைக்கிற உற்பத்தி பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே; ஆகவே, அதற்கு அரசாங்கம் நல்ல ஆலோசனை சொல்வதற்கும், அந்த உற்பத்தியை எடுத்து அரசாங்கமே விநியோகம் செய்வதற்கும் ஏற்பாட்டை செய்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சிறுதொழில்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களைப் பொறுத்து, அவ்வப்பொழுது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், மின்சாரப் பற்றாக்குறை,

மூலப்பொருள் பற்றுக்குறை எல்லாம் இருக்கின்றன. அவ்வப் பொழுது அரசாங்க கவனத்திற்கு கொண்டுவரப்படும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சிறுதொழில்களுக்கு இப்பொழுது சிட்கோவின் மூலம் நல்லமுறையில் கடன் வழங்கப் படுகிறது. இருந்தாலும் மத்திய அரசாங்கம் அதற்கு 15 சத விகிதம் மானியம் கொடுக்கிறது. பின்தங்கிய வட ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியிலேதான் இது இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் அளிக்கும் 15 சதவிகிதம் மானியத்தை எல்லாப் பகுதிகளுக்கும் வாங்கித் தர அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பின்தங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசாங்கம் என்ன உதவி கொடுக்கிறதோ, அந்த உதவிகளெல்லாம் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.

பருத்தி விதை எண்ணெய் ஆலை.

* 227 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் பருத்தி விதை எண்ணெய் உற்பத்தி ஆலை துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் பருத்தி அதிகமாக உற்பத்தியாகிறது. ஆகவே இந்த பருத்தி விதை எண்ணெய் ஆலையைத் துவங்குவதற்கு ஏற்கனவே ஒரு பரிசீலனை இருந்ததே. அது கைவிடப்பட்டு விட்டதா ? அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?